செய்தி வெளியீடு எண்: 371 நாள் : 11.07.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி, இன்று 11.07.2013 காலை 10.00 மணியளவில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை நந்தனம் மற்றும் கோபாலபுரம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்,20 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் வெளிச்சந்தை அரிசி விற்பனை அங்காடிகள் மற்றும் அமுதம் பல்பொருள் சிறப்பாடிகள் ஆகியவற்றை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் ஆய்வு செய்தார். ஆய்வின் பொழுது மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி.பா.வளர்மதி உடனிருந்து அங்காடிகளைப் பார்வையிட்டார்.

காய்கறி விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில் சென்னை புறநகர் பகுதிகளில் 31 இடங்களில் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளின் மூலம் மலிவு விலையில் காய்கறி விற்பனையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் சென்ற மாதம் 20.06.2013 அன்று காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்கள். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக சென்னை மாநகரில் நந்தனம், கோபாலபுரம், அண்ணாநகர், கீழ்ப்பாக்கம், இந்திராநகர், அண்ணா நெடும்பாதை ஆகிய ஆறு இடங்களில் செயல்பட்டு வரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலமும் 25 கூட்டுறவு அங்காடிகள் மூலமும் மலிவான விலையில் புத்தம் புதிய காய்கறிகள் அன்றாடம் கொள்முதல் செய்யப்பட்டு நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களின் ஆய்வின் போது காய்கறி அங்காடிகளில் திரளாக வந்திருந்த பொது மக்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த ஒப்பற்ற திட்டத்தினால் தங்களது தினசரி காய்கறி கொள்முதல் செலவில் சுமார் 40 சதவீதம் வரை சேமிப்பு செய்ய முடிகிறது என்று மகிழ்ச்சியுடன் கூறியதுடன் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியினையும் தெரிவித்துக் கொண்டனர்.**

**மேலும் வெளிச்சந்தையில் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த 17.04.2013 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் தங்களது திருக்கரங்களால் துவக்கி வைத்த 1 கிலோ அரிசி 20 ரூபாய்க்கு வழங்கும் திட்டம் மக்களிடையே அமோக வரவேற்பு பெற்று வருவதுடன், நுகர்வோரின் தேவைக்கேற்ப தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 38 அங்காடிகளும் கூட்டுறவு துறையின் மூலம் 241 அங்காடிகளும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இன்று வரை இத்திட்டத்தின் மூலம் 25,700 குவிண்டால் அரிசி விற்பனை செய்யப்பட்டு வெளிச்சந்தையில் அரிசியின் விலை உயராமல் கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய நடுத்தர மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விலையில்லா அரிசி, மானிய விலையில் தரமான பருப்பு வகைகள், பாமாயில் முதலியன வழங்குதல், வெளிச்சந்தையில் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த 1 கிலோ அரிசி 20 ரூபாய்க்கு வழங்கும் திட்டம், பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் மலிவான விலையில் அன்றாடம் கொள்முதல் செய்து வழங்கும் காய்கறி அங்காடிகள் ஆகியவற்றின் மூலம் தமிழக மக்களுக்கு முழுமையான உணவுப் பாதுகாப்பினை வழங்கி வருகிறார்கள் என்று உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

அங்காடி ஊழியர்கள் கடைகளுக்கு வரும் பொது மக்களிடம் அவர்களுக்கு தேவைப்படும் பொருள்களை கனிவுடன் விற்பனை செய்து, தரமான பொருள்களை மட்டுமே வழங்கி, பொருள்கள் தட்டுப்பாடின்றி கிடைத்திட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின்போது மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி இராஜலெட்சுமி, உணவுப்பொருள் வழங்கல் துறை முதன்மை செயலாளர் மற்றும் ஆணையாளர் திரு.ஸ்வரண்சிங்,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர்.ஆ.சந்திரசேகரன்,இ.ஆ.ப., மண்டல மேலாளர் திருமதி.S.சௌந்தரமணி ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**